அசல் வழக்கு எண். 244/2018 தேதி 20-02-2024

வா.சா.1 – இரவிசந்திரன்

**2, 3, 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. சர்வே எண்.75 மற்றும் 77 ற்கான புல வரைபடம் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புல வரைபடம் சர்வே எண்.75 மற்றும் 77 ற்கு உரியது என்றால் சரிதான். மேற்படி புல வரைபடத்தில் சர்வே எண்.71 முதல் 76 மற்றும் 52 ஆகியவற்றிற்கு பாதை மற்றும் வண்டிப்பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. தாவா பி பட்டியல் சொத்தில் உள்ள பாதை வழியாக தான் ஏ பட்டியல் சொத்திற்கு செல்ல முடியும் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ பதிவேடு உள்ளிட்ட வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.75/1 பூஸ்துதி வண்டிப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

2. சர்வே எண் 75/1 ல் உள்ள பாதை முத்துசாமி பிள்ளை காளியப்பன் , முனியம்மாள், ஐயம்மாள், பொம்மா நாயக்கர், ஆறுமுகம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பாதை என்றும், மேற்படி நபர்களின் பெயரில் பட்டா வழங்கப்படடுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாதையில் மேற்கண்ட 6 நபர்களை தவிர எனக்கோ என் குடும்பத்தினருக்கோ எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றும், பிராது தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை அலைக்கழிக்கும் நோக்கில் வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்திற்கு செல்ல வேறு பாதைகள் உள்ளதால் வசதி உரிமை பாத்தியம் கோர இயலாது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**